செ.வெ.எண்:04/பிப்ரவரி நாள்: 02.02.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் நகரில் புதிதாக திறக்கப்படவுள்ள அரசு சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதியில் சேர தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரில் அரசு சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதி துவங்க தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்விடுதியில் தங்கி பயில தகுதியுள்ள 100 மாணவியர்கள், தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவ்விடுதிக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரியில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் சிறுபான்மையினர் மற்றும் அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த மாணவியர்களும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். விடுதி மாணவியர்களுக்கு உணவு மற்றும் உறைவிடம் இலவசமாக வழங்கப்படும்.

இந்த விடுதியில் சேர விரும்பும் மாணவியர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விடுதியில் சேர விரும்பும் மாணவியர்கள், அந்தந்த கல்லூரி முதல்வர்/இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் வசம்/ இராமநாதபுரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் வருகின்ற 08.02.2016-க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**